# செப்டம்பர் - 03 - ஞாயிறு

**“என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்செல்லட்டும்’’ ( மத். 16:24)**

## முதல் வாசகம் : ஏரேமியா20 : 7 – 9

ஆண்டவரே! நீர் என்னை ஏமாற்றிவிட்டீர் நானும் ஏமாந்து போனேன் நீர் என்னைவிட வல்லமையுடையவர் என்மேல் வெற்றி கொண்டுவிட்டீர் நான் நாள் முழுவதும் நகைப்புக்கு ஆளானேன். எல்லாரும் என்னை ஏளனம் செய்கின்றார்கள்.நான் பேசும்போதெல்லாம் ”வன்முறை அழிவு” என்றே கத்த வேண்டியுள்ளது. ஆண்டவரின் வாக்கு என்னை நாள் முழுதும் பழிச்சொல்லுக்கும் நகைப்புக்கும் ஆளாக்கியது.”அவர் பெயரைச் சொல்லமாட்டேன் அவர் பெயரால் இனிப் பேசவும் மாட்டேன்” என்பேனாகில், உம் சொல் என் இதயத்தில் பற்றியெரியும் தீ போல இருக்கின்றது. அது என் எலும்புகளுக்குள் அடைப்பட்டுக் கிடக்கின்றது. அதனை அடக்கிவைத்துச் சோர்ந்து போனேன் இனி என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.

**பதில்பாடல் :** கடவுளே என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 12 : 1 – 2

சகோதர சகோதரிகளே, கடவுளுடைய இரக்கத்தை முன்னிட்டு உங்களை வேண்டுகிறேன் கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு.இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

## நற்செய்தி: மத்தேயு 16 : 21 - 27

அக்காலத்தில் இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் பலவாறு துன்பப்படவும் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடருக்கு அந்நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார்.பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்துகொண்டு, ”ஆண்டவரே, இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது” என்றார்.ஆனால் இயேசு பேதுருவைத் திரும்பிப் பார்த்து, ”என் கண்முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய் ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்” என்றார்.பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, ”என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக என்பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார்.மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்?மானிடமகன் தம் தந்தையின் மாட்சியோடு தம் வான தூதர்களுடன் வரப்போகிறார் அப்பொழுது ஒவ்வொருவருக்கும் அவரவர் செயலுக்கேற்பக் கைம்மாறு அளிப்பார்.

**தியானம்:** பொதுக்காலத்தின் இருபத்தி இரண்டாவது வார இறைவார்த்தைப் பகுதிகள் எமது செயல்களால் எம் விசுவாச வாழ்விற்கு உயிர்கொடுக்க எம்மை அழைக்கின்றது. இன்றைய நற்செய்தியில் இயேசு தமது சீடர்கள் ஒவ்வொருவருக்கும் தங்களைத் தாம் இழந்து சிலுவைகளை ஏற்று தம்மைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் தாம் மண்ணுலகிற்கு வந்ததன் நோக்கத்தையும் வெளிப்படுத்துகின்றார். முதல் வாசகத்தில் எரேமியா அருமையாக கடவுளிடம் வாதாடுவதைப் வாசிக்கின்றோம். நீர் கூறிய வார்த்தைகளை அறிவித்ததால் மக்கள் என்னை கொலை செய்யத் தேடுகின்றார்கள். இது ஒருபுறம் இருக்க மக்கள் மனம்மாறும் போது நான் அறிவித்த தண்டனையை வராது. நீர் தடுத்து விடுவதால் மக்கள் என்னை எள்ளி நகையாடுகின்றனர். ஆனாலும் என்னுள் புகுந்துள்ள உமது வாக்கு என்னை உம்பணி செய்ய அழைக்கின்றது என்றார். எமது வாழ்வில் துன்ப துயரங்கள் சோதனைகள் என்பன நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்களாக இருக்கின்றன. அவற்றை சந்தித்து ஏற்றுக்கொண்டு என்பின்னே வா என்பதே இறைமகன் இயேசுவின் எளிமையான படிப்பினையாக இருக்கின்றது. எனவேதான் எமது விசுவாச வாழ்வு உயிர்கொடுக்க உயிர் கொடுப்போம், இறைமகன் இயேசுவின் அன்புப் பிள்ளைகளாக வாழ முன்வருவோம்.